ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்யப் பிரபந்த பாசுர பாகவதம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# திவ்யப் பிரபந்த பாசுர பாகவதம்

## திருப்பாற்கடல் வருணனை

பால் ஆலிலையில் துயில் கொண்ட பரமன்
மன்னிய நாகத்தணை மேல் ஓர் மா மலை போல்
சுடர் ஆழி சங்கிருபால் பொலிந்து தோன்றத்
திரு மடந்தை மண் மடந்தை இருபாலும் திகழ
ஆயிரம் தோள் பரப்பி முடி ஆயிரம் மின் இலகக்
கடல் ஓதம் கால் அலைப்பக்
கடலோன் கைமிசைக் கண்வளர்வது போல்
உன்னிய யோகத்துறக்கம் தலைக் கொண்டு
இணை இல்லா இன் இசை யாழ் கெழுமி
இன்பத் தும்புருவும் நாரதனும் இறைஞ்சி ஏத்தக்
கொத்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபம் கொண்டு அமரர் தொழப்
பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்
சித்தர்களும் தொழுதிறைஞ்ச
அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
ஏழ் உலகும் தனிக் கோல் செல்ல வீற்றிருந்து

## அவதார காரணம்

விண்கொள் அமரர்கள் வேதனை தீர
மண் உய்ய மண் உலகில் மனிசர் உய்யப்
பாரேறு பெரும்பாரம் தீரத்

துவரிக்கனிவாய் நிலமங்கை துயர் தீர
மண்ணின் பாரம் நீக்குவதற்கே வேண்டித்தேவர் இரக்கச்
சாதுசனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு
என்ன நோன்பு நோற்றாள் கொலோ
இவனைப் பெற்ற வயிறுடையாள்
என்றும் வார்த்தை எய்துவித்தத்
தந்தை காலில் பெரு விலங்கு தாளவிழ
மக்கள் அறுவரைக் கல்லிடை மோத இழந்த
தாயைக் குடல் விளக்கம் செய்ய

## திரு அவதாரம்

கதிர் ஆயிரம் இரவி கலந்து எரித்தால் ஒத்து
மல்லை மூதூர் வட மதுரையில்
மத்தக் களிற்று வசுதேவர் தம்முடைச்
சித்தம் பிரியாத தேவகி தன் வயிற்றில்
அத்தத்தின் பத்தாம் நாள் தோன்றிக்
கஞ்சன் வலை வைத்த அன்று கார் இருள் எல்லில் பிழைத்து
எடுத்தப் பேராளன் நந்தகோபன் தன் இன்னுயிர்ச் சிறுவன் எனக்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரனாய்த்
தெய்வ நங்கை யசோதைக்குப்
போத்தந்த பேதைக் குழவியாய்ப்
பலதேவற்கோர் கீழ்க்கன்றாய்
ஆயர்கள் நாயகனாய்
ஆயர் பாடிக்கணி விளக்காய்க்
கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தாய்க்
காண்டல் இன்றிக் கொண்டு வளர்க்கக்
குழவியாய்த் தான் வளர்ந்து

## ஆயர்ப் பாடியில் மங்களம்

எண்ணெய் சுண்ணம் எதிர் எதிர் தூவிடப்
பாடுவார்களும் பல் பறை கொட்ட
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாட
அயல் இடத்துப் பேர்ந்து
தத்துக் கொண்டாள் கொலோ தானே பெற்றாள் கொலோ
பேணிச் சீருடைப் பிள்ளை
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர

## பூதனை வதம்

தீ மனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும்
பெண்மை மிகு வடிவு கொண்டு
வன் பேய்ச்சி தன் மகனாகத்தான் முலை உண்ணக் கொடுக்க
முலை உண்பான் போலே முனிந்து உண்டு
வஞ்சனத்து வந்த பேய்ச்சி ஆவி பாலுள் வாங்கிச்
சூர் உருவின் பேய் அளவு கண்டு

## சகட பங்கம்

மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுத் தொட்டிலில்
உறங்குவான் போலே கிடந்து
நாள்கள் ஓர் நால் ஐந்து திங்கள் அளவிலே
தாளை நிமிர்த்து உருளும் சகடம் உதைத்து

## நாம கரணம்

ஆய்ப் பாடி ஆயர் பத்து நாளும் கடந்த இரண்டாம் நாள்
எத்திசையும் சயமரம் கோடித்துக்

கரு வடிவில் செங்கண்ண வண்ணன் தன்னை
வேதம் வல்லார்களைக் கொண்டு
கார் முகிலே ! என் கண்ணா !
செங்கண் நெடுமால் சிரீதரா ! என்றழைத்து
நாவினால் நவிற்று இன்பம் எய்த

## பால லீலைகள்

மாயக் கூத்தன்
தன் முகத்துச் சுட்டி தூங்கத் தூங்கத் தவழ்ந்து போய்ப்
பொன் முகக் கிண்கிணி ஆர்ப்பப் புழுதி அளைந்து
கோல நறும் பவளச் செந்துவர் வாயின் இடைக் கோமள
வெள்ளி முளைப் போல் சிறு பல் இலகக்
கண கண சிரித்துவந்து முன் வந்து
நின்று முத்தம் தந்து
ஆயர்கள் போரேறாய்ச் செங்கீரை ஆடி
எண்ணெய்க் குடத்தை உருட்டி இளம் பிள்ளை கிள்ளி எழுப்பிக்
கண்ணைப் புரட்டி விழித்துக் கழகண்டு செய்து
வெண்ணெய் விழுங்கி விரைய உறங்கிப்
பானையிற் பாலைப் பருகிப் பற்றாதார் எல்லாம் சிரிப்ப
மடங்கொள் மதி முகத்தாரை மால் செய்து
அழகிய வாயில் அமுத ஊறல் தெளிவுறா
மழலை முற்றாதிளஞ்சொல்லால்
வானிலா அம்புலீ ! சந்திரா ! வா என்று அம்புலி விளித்து

## பிள்ளை வாயுள் ஏழுலகம்

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்
உண்ணும் திறத்து மகிழ்ந்து

கையும் காலும் நிமிர்த்துக் கடார நீர்
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நா வழித்தாளுக்கங்காந்திட
வாயுள் வையம் ஏழுங்காண
ஆடி ஆடி அசைந்து அசைந்திட்டதனுக்கேற்ற கூத்தை ஆடி

### உரலில் கட்டுப்படுதல்

வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைக்க
வெள்ளி மலை இருந்தால் ஒத்த வெண்ணெயைத்
தாயர் மனங்கள் தடிப்ப

உள்ளம் குளிர அமுது செய்து
விரலோடு வாய் தோய்ந்த வெண்ணெய் கண்டு
ஒளியா வெண்ணெய் உண்டான் என்று உரலோடு ஆய்ச்சி ஒண் கயிற்றால்
விளியா ஆர்க்க ஆப்புண்டு விம்மி அழுது
பொத்த உரலைக் கவிழ்த்து அதன் மேல் ஏறித்
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறு ஆர விழுங்கி
சீரால் அசோதை அன்புற்று நோக்கி
அடித்தும் பிடித்தும் அனைவர்க்கும் காட்ட
ஊரார்கள் எல்லாரும் காணக்
கண்ணிணுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டு
பெருமா உரலில் பிணிப்புண்டிருந்து
விண்ணெல்லாம் கேட்க அழுது
எழில் கொள் தாம்பு கொண்டு அடிப்பதற்கு எள்கி

## மருத மரங்களை முறித்தது

மண மருவு தோள் ஆய்ச்சி ஆர்க்கப்போய் உரலோடும்
ஒருங்கொத்த இணை மருதம் உன்னிய வந்தவரை
ஊரு கரத்தினோடும் உந்தி
எண்டிசையோரும் வணங்க
இணை மருதூடு நடந்திட்டு

## மாடு கன்றுகளை மேய்த்தல்

அழகிய பைம் பொன்னின் கோல் அங்கைக் கொண்டு
கழல்கள் சதங்கை கலந்தெங்கும் ஆர்ப்ப
மழகன்றினங்கள் மறித்துத் திரிந்து
புகழ்ப் பலதேவன் என்னும் தன் நம்பியோடப் பின் கூடச் சென்று
தன்னேர் ஆயிரம் பிள்ளைகளோடு தளர் நடை இட்டு
வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடை
   விட்டு அதன் ஓசை கேட்டு
அசல் அகத்தார் பரிபவம் பேச
இல்லம் புகுந்து அவர் மகளைக் கூவிக்
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு
கொல்லையில் நின்றும் கொணர்ந்து
   விற்ற அங்கொருத்திக்கவ்வளை கொடுத்து
நல்லன நாவற் பழங்கள் கொண்டு
கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்துண்டு
இட்டமான பசுக்களை இனிது மறித்து நீருட்டி
விட்டுக் கொண்டு விளையாடி
கணங்களோடு மின் மேகம் கலந்தாற் போல்
வனமாலை மினுங்க நின்று விளையாடி

கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதிக்
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு
மழைகொலா வருகின்றது என்று சொல்லி
மங்கைமார் சாலக வாசல் பற்றி நுழையக்
குழல்களும் கீதமும் ஆகி
முற்றத்தூடு புகுந்து தன் முகம் காட்டிப் புன் முறுவல் செய்து
பஞ்சிய மெல் அடிப் பிள்ளைகளுடன்
வைத்த நெய்யும் காய்ந்த பாலும் வடி தயிரும்
நறுவெண்ணெயும் இத்தனையும் பெற்றறியாமே
ஆயிர நாழி நெய்யைப் பாகந்தான் வையாதுண்டு

## வத்சாசுர பகாசுர வதம்

கானக வல்விளவின் காயுதிரக் கருதிக்
கன்றது கொண்டு எறிந்து
பள்ளத்தில் மேயும் பறவை உருக் கொண்டு
கள்ள அசுரன் வருவானைத் தான் கண்டு
புள்ளிது வென்று பொதுக்கோ வாய்க்கீண்டிட்டு

## தேனுகாசுர வதம்

வாசியாகி நேசமின்றி வந்து எதிர்ந்த தேனுகன்
நாசமாகி நாளுலப்ப நன்மைசேர் பனங்கனிக்கு
வீசிமேல் நிமிர்ந்த தோளின் இல்லையாக்கி

## காளிய மர்த்தனம்

ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிடப்
பூத்த நீள் கடம்பேறித்
தடம்படு தாமரைப் பொய்கை கலக்கி

விடம்படு நாகத்தை ! வால் பற்றி ஈர்த்துப்
படம்படு பைந்தலைமேல் ஏழப்பாய்ந்திட்டு
உடம்பை அசைத்து
வேயின் குழலூதி வித்தகனாய் நின்று
நீள் முடி ஐந்திலும் நின்று நடம் செய்து

## பிலம்ப வதம்

பாண்டி வடத்தில்
பிலம்பின் தன்னைப் பண் அழியப் பலதேவன் வெல்ல

## காட்டுத்தீயை விழுங்கல்

நின்ற செந்தீ மொண்டு சூறை நீள்விசும்பூடு இரியக்
காண்கின்ற வெந்தீ எல்லாம் யானே என்று
தான் விழுங்கி உய்யக் கொண்டு

## வேணுகானம் செய்தல்

வள்ளி நுடங்கிடை மாதர் வந்தலர் தூற்றிட
துள்ளி விளையாடித் தோழரோடு
கானகம்பாடி உலாவி உலாவிச்
சிறு விரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக்
குறு வெயர்ப்புருவம் கூடலிப்பக்
கோவலர் சிறுமியர் இளங்கொங்கை குதுகலிப்ப
மேனகையோடு திலோத்தமை
அரம்பை உருப்பசியர் அவர் வெள்கி மயங்கி
நன்னரம்புடைய தும்பருவோடு நாரதனும் தம் தம் வீணை மறப்பப்
பறவையின் கணங்கள் கூடு துறந்து வந்து சூழ்ந்து

படுகாடு கிடப்பக்
கறவையின் கணங்கள் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்க
மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து
மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர
இரண்டு பாடும் துலங்காப் புடை பெயரா
எழுது சித்திரங்கள் போல நிற்க
மரங்கள் நின்று மதுதாரைகைகள் பாய
மலர்கள் வீழ வளர் கொம்புகள் தாழக்
கோவிந்தனுடைய கோமள வாயில்
குழல் முழைஞ்சுகளின் ஊடு குமிழ்த்துக்
கொழித்து இழிந்த அமுதப் புனல் தன்னை
குழல் முழவம் விளம்பக் கோவலனாய்க் குழல் ஊதி ஊதி

## கோபியர் வச்திராபகரணம்

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில்
கோழி அழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்த
பங்கயநீர் குடைந்து ஆடுகின்றார்கள்
ஆயர் மடமக்களைப் பின்னே சென்று ஒளித்திருந்து
அங்கவர் பூந்துகில் வாரிக் கொண்டிட்டு
அரவேர் இடையார் இரப்ப
மங்கை நல்லீர் வந்துகொண்மின் என்று மரம் ஏறி இருந்து
கன்னியரோடு எங்கள் நம்பி கரியபிரான் விளையாடி

## வேள்வி மங்கையர் வேண்டடிசில் அளித்தது

பத்த விலோசனத்தில்
வேர்த்துப் பசித்து வயிறசைத்து வேண்டு அடிசில் உண்டு

## கோவர்த்தனகிரி பிடித்தது

இந்திரனுக்கென்று ஆயர்கள் எடுத்த
எழில் விழவில் பழநடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது
இமயப் பெருமலைபோல்
அமைத்த சோறதுவெல்லாம்
போயிருந்தங்கொரு பூதவடிவு கொண்டு

முற்ற வாரி வளைத்துண்ண
மேலை அமரர்பதி மிக்குவெகுண்டுவரக்
காள நன் மேகமவை கல்லொடு கால்பொழிய
வண்ண மால் வரையே குடையாகச்
செந்தாமரைக் கைவிரல் ஐந்தினையும்

கப்பாக மடுத்து மணி நெடுந்தோள்
காம்பாகக் கொடுத்துக்
கல்லெடுத்துக் கன்மாரி காத்து

## கண்ணன் கோபியரோடு விளையாடல்

மங்கல நல்வனமாலை மார்வில் இலங்க
மயில் தழைப் பீலி சூடிப்
பொங்கிள ஆடை அரையில் சாத்திப்
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து
கொங்குநறுங் குழலார்களோடு குழைந்து குழலினி தூதிக்
கொல்லாமை செய்து குரவை பிணைந்து சுழலக்
குடங்கள் தலைமீது எடுத்துக் கொண்டாடி

மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்து
தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்தித்து
முற்றா இளையார் விளையாட்டொடு
காதல் வெள்ளம் விளைவித்து

**கேசி வதம்**

மாவாயின் அங்கம் மதியாது கீறி

**மதுராபுரிக்கு விசயம்**

வில்லார் விழவில் வடமதுரை விரும்பி

**கூனி கூன் நிமிர்ந்தது**

நாறிய சாந்தம் நமக்கு இறைநல்கு என்னத்
தேறி அவளும் திருவுடம்பில் பூச
ஊறிய கூனினை உள்ளொடுங்க அன்று ஏற உருவி

**குவலயா பீட வதம்**

விற்பிடித் திறுத்து
வளவெழும் தவளமாட மதுரைமா நகரம் தன்னுள்
வெம்பு சினத்து அடல்வேழம் வீழ
வெண் மருப்பு ஒன்று பறித்து

**மல்லர் வதம்**

இருமலை போல் எதிர்ந்த மல்லர் இருவர்
வலியமுடி இடிய வாங்கி

### கம்ச வதம்

செம்பொன் இலங்கு வலங்கை வாளி
திண்சிலை தண்டொடு சங்கம் ஒள்வாள்
உம்பர் இருசுடர் ஆழியோடு
கேடகம் ஒண் மலர் பற்றித்
தொட்ட படை எட்டும் தோலாத வென்றியான்

கறுத்திட்டு எதிர் நின்ற
கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்று
அரையனை எழப் பாய்ந்து உதைத்துக்
குஞ்சி பிடித்து அடித்துயிருண்டு
அவன் மாளக் கண்டு

### சாந்தீபனியின் புத்திரனை மீட்டது

மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்த தக்கணையா உரு உருவே கொடுத்து

### ருக்மணி கல்யாணம்

கண்ணாலம் கோடித்துக் கன்னி தன்னைக் கைப்பிடிப்பான்
திண் ஆர்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக் கைப்பிடித்து
உருப்பிணி நங்கையைத் தேர் ஏற்றிக் கொண்டு
விருப்புற்று அங்கேக விரைந்து எதிர்வந்து
செருக்குற்றான் வீரம் சிதையத் தலையைச் சிரைத்து
அன்றங்கு அமர்வென்று நங்கை அணிநெடுந்தோள் புணர்ந்து
ஏடிலங்கு தாமரை போல் செவ்வாய் முறுவல் செய்தருளித்
திருவுக்கும் திருவாகிய செல்வனாய்ப் பெண் அமுதுண்டு

## நப்பின்னை திருமணம்

துப்புடை ஆயர்கள்தம் சொல்வழுவாது ஒருகால்
தூயகருங்குழல் நல்தோகை மயில் அனைய
நப்பின்னைதன் திறமா நல்விடை ஏழவிய
வீயப் பொருது வியர்த்து நின்று

## நரகாசுர வதம்

மன்னு நரகன் தன்னைச் சூழ்போகி வளைத்தெறிந்து
கன்னி மகளிர் தம்மைக் கவர்ந்து

## துவாரகை அமைத்தல்

பதினாறாம் ஆயிரவர் தேவிமார் பணிசெய்யத்
துவரை என்னும் அதில் நாயகராகி வீற்றிருந்து

## பாரிசாத அபகரணம்

என் நாதன் தேவிக்கு அன்று இன்பப்பூ ஈயாதாள்
தன் நாதன் காணவே தண் பூ மரத்தினை
வன் நாதப் புள்ளால் வலியப் பறித்துக்
கற்பகக் காவு கருதிய காதலிக்கு
இப்பொழுது ஈவன் என்று இந்திரன் காவினில்
நிற்பனசெய்து நிலாத் திகழ் முற்றுத்துள் உய்த்து

## வாணாசுர வதம்

மாவலி தன்னுடைய மகன் வாணன் மகள் இருந்த
காவலைக் கட்டழித்துப் பரிவின்றி
வாணனைக் காத்தும் என்று
அன்று படையோடும் வந்தெரிந்த

திரிபுரம் செற்றவனும் மகனும் பின்னும் அங்கியும்போர் தொலையப்
பொருசிரைப் புள்ளைக் கடாவிப்
பொருகடலை அரண் கடந்து புக்கு
மாயப் பொருபடை வாணனை
ஆயிரம் தோளும் பொழிகுருதி பாய ஆழி சுழற்றி

## பௌண்ட்ரகவாசுதேவ பங்கம்

புகரார் உருவாகி முனிந்தவனைப்
புகழ்வீட முனிந்து உயிருண்டு
அசுரன் நகராயின பாழ்பட நாமம் எறிந்து
காய்சினத்த காசி மன்னன்
நாசமுற்று வீழ நாள் கவர்ந்து

## சிசுபால வதம்

கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்
சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன்
திருவடி தாட்பால் அடையப்
பெருந்துன்பம் வேரற நீக்கித்
தன் தாளிணைக் கீழ்ச் சேர்த்துப்

## தந்தவக்கரனை முடித்தல்

பொங்கரவ வக்கரனைக் கொன்று

## திரௌபதி சரணாகதி

அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்கு இளையவன்
அணி இழையைச் சென்று

“எந்தமக்கு உரிமைசெய்” எனத் தரியாது
“எம்பெருமான் அருள்” என்னப்

## கண்ணன் விசுவரூபம் காட்டியது

பங்கயக் கண்ணன் ஒன்றே உரைப்பான்
ஒரு சொல்லே சொல்லுவான்
துன்று முடியான் துரியோதனன் பக்கல் சென்று
கோதைவேல் ஐவர்க்காய் மண் அகலம் கூறிடுவான்
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டு
அரவுநீள் கொடியோன் அவையுள்
ஆசனத்தை அஞ்சிடாதே இட
அதற்குப் பெரிய மாமேனி அண்டம் ஊடுருவப்
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்து
ஊர் ஒன்று வேண்டிப் பெறாத உரோடத்தால்
மண்மிசைப் பெரும்பாரம் நீங்க ஓர் பாரதமாப் பெரும் போரில்

## தேரோட்டியாய்த் திகழ்ந்தது

பற்றலர் வீயக் கோல் கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர் முன் நின்று

## அருச்சுனன் கண்ணன் திருவடிமேல் அர்ச்சித்த பூவைச் சிவன் முடிமேல் கண்டது

தீர்த்தன் உலகளந்த சேவடிமேல் பூந்தாமம் சேர்த்தி
அவையே சிவன்முடிமேல் தான்கண்டு
பார்த்தன் தெளிந்தொழிய

## கீதோபதேசம்

அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர் அறிய
நெறியெல்லாம் எடுத்துரைத்து
நீர்மையில் நூற்றுவர் வீய
ஐவர்க்கு அருள் செய்து நின்று

## ஜயத்திரதனை முடித்து

ஆழி கொண்டு அன்று இரவி மறைப்பச்
சயத்திரதன் தலையைப் பாழில் உருளப்படை பொருது

## பரீக்சித்தை உயிர் மீட்டது

மருமகன் தன் சந்ததியை உயிர் மீட்டு மைத்துனன்மார்
உருமகத்தே வீழாமே குருமுகமாய்க் காத்து
எல்லாச் சேனையும் இருநிலத்து அவித்து
சந்தம் அல்குழலாள் அலக்கண் நூற்றவர் தம்
பெண்டிரும் எய்தி நூல் இழப்ப
மைத்துனன்மார் காதலியை மயிர் முடிப்பித்து
அவர்களையே மன்னர் ஆக்கி

## வைதிகன் மக்களைமீட்டது

வேதவாய் மொழி அந்தணன் ஒருவன்
எந்தை நின் சரண் என்னுடை மனைவி
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்
கடிய தெய்வம் கொண்டொளிக்கும் என்றழைப்ப
இடரின்றியே ஒருநாள் ஒருபோழ்தில் எல்லா உலகும் கழியப்
படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத் திண்தேர் கடவிச்

சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைச் சோதியில்
வைதிகன் பிள்ளைகளை உடலொடும் கொண்டுகொடுத்து

## ஆதியஞ் சோதியுருச் சேர்தல்

துயரில் சுடரொளி தன்னுடைச் சோதி
நின்ற வண்ணம் நிற்கவே
துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து
துயரங்கள் செய்து
தன் தெய்வ நிலை உலகில் புக உய்த்துக்
கதையின் திருமொழியாய் நின்று
நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்ப்
பல்வகையும் பரந்து வைகுந்தம் புகுதலும்
எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்
வண்ணமலர் ஏந்தி வைகலும் நண்ணி
ஒருமலையால் பரவி ஓவாது எப்போதும்
மால்வண்ணன் தாள்தாமரை அடைவோம் என்று
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்திச்
சூட்டு நன் மாலைகள் தூயன ஏந்தி
ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமொடு இசைதிசை கெழுமிக்
கீதங்கள் பாடி மயங்கித் திருவடி தொழப்
பாடுநல் வேதவொலி பரவைத்திரைபோல் முழங்க
ஆயிரம் பெயரால் அமரர் சென்று இறைஞ்ச
உவந்த உள்ளத்தனாய்
அண்டமாய் எண்டிசைக்கும் ஆதியாய்
நீதியான பண்டமாம் பரமசோதியாய்
ஆடரவு அமளியில் அறிதுயில் அமர

இடங்கொள் சமயத்தை எல்லாம்
எடுத்துக் களைவன போல்
தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடையப் பூதங்களேயாய்க்
கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பல பல பாடி
நடந்தும் பரந்தும் குனிந்தும் நாடகம் செய்கின்றனவே
தோட்டலர் பைந்தார்ச் சுடர் முடியானைத்
தொழுது நல் மொழியால் தொகுத்துரைத்த
பாட்டிவை பாடப் பத்திமை பெருகிச்
சித்தமும் திருவொடுமிகுமே
பொலிக ! பொலிக ! ! பொலிக !

திவ்யப் பிரபந்த பாசுர பாகவதம் முற்றிற்று